[1973 நவம்பர் 21

இணைப்பு I

[15-ம் பக்கத்தில் 1-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

இருதய ராஜ், மோட்டார்ப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான எம்.டி.இ. 7922-ம் பதிவு எண்ணுடைய பேருந்து, 5—12—1972-ல் காலை 11.00 மணிக்கு அட்டவணை பயணப்படி குன்னூர் வழியாக கோயம்புத்தூருக்குச் செல்ல உதகமண்டலத்தை விட்டுப் புறப்பட்டது. இந்தப் பேருந்து 11.45 மணிக்குக் குன்னூரைப் போய்ச்சேர்ந்ததும், பயணிகளை ஏற்றிக்கொண்ட பிறகு வலவர், பயணித் துணையைச் சேர்க்காமல் மொத்தம் 40 பயணிகளுடன் கோயம்புத்தூரை நோக்கி பயணம் தொடக்க 12 மணிக்குக் குன்னூரை விட்டுப் புறப்பட்டது. சுமார் 12.15 மணியளவில் குன்னூரிலிருந்து ஒரு மைல் தள்ளி காந்திபுரத்திற்கு அருகில், பேருந்து சாலை வழியே சென்று கொண்டிருந்த இரண்டு பாதசாரிகளை இடித்துத் தள்ளி, சாலையின் இடப்பக்கத்தில் உள்ள ஒரு மரத்தின் மீது மோதி முடிவாக இடப்பக்கம் தலை குப்புறச் சாய்ந்தது. (ஒருவர் பேருந்துப் பயணி, மற்றொருவர் பாதசாரி ஆகிய) பெண்கள் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இரு பெண்கள் (ஒருவர் பேருந்து மோதிய பாதாசாரி, மற்றொருவர் பேருந்துப் பயணி) மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் போது இறந்தனர். வலவர் உட்பட காயமடைந்த 16 பேரும் சிகிச்சைக்காக குன்னூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். காயமுற்ற மேலும் ஒருவர் தாமாகவே உதகமண்டலத்திற்குச் சென்று உதகமண்டலத்திலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் தாமாகவே சேர்ந்து கொண்டார். சிகிச்சைக்காக குன்னூர் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட காயமுற்றவர்களுள் இரு ஆண்கள் மரணமடைந்து விட்டனர். இவ்வாறாக இந்த விபத்தில் ஆறு பேர் (நான்கு பெண்கள், இரண்டு ஆண்கள்) உயிரிழந்தனர். அகநிலை நோயாளியாக இருந்து பேருந்து வலவர் கைது செய்யப்பட்டு பிணையத்தின் பேரில் விடுவிக்கப் பட்டார். இ.பி.கோ. 304.ஏ, 337-வது பிரிவுகளின்கீழ் 535/72-ம் குற்ற எண்ணில் குன்னூர் காவல் நிலையத்தில் காவலர் வழக்கொன்றைப் பதிவு செய்துள்ளனர். ரப்பர் குழாய் திடீரென்று வேலை செய்யத் தவறியதால் பிரேக் செயல்படத் தவறிவிட்டது என்றும், அதனால் விபத்து ஏற்பட்டது என்றும் மோட்டார் வண்டிகள் ஆய்வாளர் தெரிவித்துள்ளதால், இவ்வழக்கு உண்மை நிலையைத் தவறாகக் கொண்டதால் தொடரப்பட்ட வழக்கு எனக் கருதப்பட்டதென, காவல் துறை சூப்பிரண்டு இப்போது தெரிவித்துள்ளார்.